**இராம கோபாலன்**
*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

5-3-2010

**அதே பாதையில் தான் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்ற முடியும் என்ற தமிழக முதல்வரின் கருத்திற்கு இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் கண்டனம்!**

நேற்று முன்தினம் திருச்சியில் பேட்டி கொடுத்த தமிழக முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், சேது சமுத்திரத் திட்டத்திற்கு மாற்றுப் பாதைக்கு இடமே இல்லை, அதே பாதையில் தான் நிறைவேற்ற முடியும் என்று கூறியிருப்பது, அரசியல்வாதிகளின் சர்வாதிகாரத்திற்கு எடுத்துக்காட்டு! இதனைக் கண்டிக்கிறோம்.

புராதன சின்னமான ராமேஸ்வரம் ராமர் பாலத்தை உடைப்பது ஒன்றே தமிழக முதல்வரின் நிலைப்பாடாக இருந்து வருகிறது. இந்நிலையில் உச்ச நீதிமன்றம் மாற்றுப்பாதையைத் தேர்ந்தெடுக்கவும், சேது சமுத்திரத் திட்டத்தால் சுற்றுச்சூழல் கேடு ஏற்படுமா என்பது பற்றி ஆய்வு செய்யவும் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. உச்சநீதிமன்றத்தின் கருத்திற்கு இணங்க மத்திய அரசு வல்லுநர் குழுவைக் கொண்டு ஆய்வு செய்துவருகிறது.

இதனையெல்லாம் ஏற்காத தமிழக முதல்வர் எதேச்சாதிகாரமாக, ராமர் பாலத்தை உடைத்துதான் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்ற முடியும் என்பது உலகம் முழுவதிலும் வாழும் கோடானுகோடி இந்துக்களின் மனங்களைப் புண்படுத்தும் செயல்.

பாரதநாட்டில் ஆண்ட பழங்கால அரசர்கள் கூட தக்க நல்லோர்கள் அறிவுரைப்படி ஆட்சி செய்தார்கள், இப்படி நடந்துகொள்ளவில்லை, ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் போன்ற சர்வாதிகாரியாக தமிழக முதல்வர் செயல்படுகிறார். தான் சொல்வதே சட்டம் என்று நினைக்கும் மமதை இன்று அரசியல்வாதிகளிடம் மலிந்துள்ளது. அதனாலேயே விஞ்ஞானிகளையோ, கல்வியாளர்களையோ ஆலோசிப்பதோ, அவர்களின் கருத்தை ஏற்பதோ இல்லை. தேசத்தின் மீது அக்கறை கொண்டோர் சொற்களுக்கோ, மக்களின் கருத்துகளுக்கோ மதிப்பளிக்காமல் தான்தோன்றித்தனமாக பேசும் ஆணவம் மேலோங்கி உள்ளது.

இத்தகைய பேச்சு உச்ச நீதிமன்றத்தின் கருத்தினை மக்கள் ஏற்கக்கூடாது, எதிராக வன்முறையைத் தூண்டிவிட வேண்டும் என்பதன் உள்நோக்கமாகத் தெரிகிறது. திராவிட முன்னேற்றக்கழக பொதுக்குழுவிலும் சேதுசமுத்திரத்திட்டம் பற்றிய தீர்மானத்தில் 'பொறுமைக்கு ஓர் எல்லை உண்டு, போர்க்குணம் காட்டத் தயங்கமாட்டோம்' என்று பேசியதிலிருந்து தெரிகிறது.

அப்போதே தமிழக முதல்வரின் இத்தகைய பேச்சைக் கண்டித்ததோடு, மத்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் இந்து முன்னணி கேட்டுக்கொண்டது.

முதல்வர் இத்தகைய பேச்சுகளை விலக்கிக்கொண்டு, நிபுணர்கள் மற்றும் மக்கள் கருத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். இல்லையேல் இந்துக்கள் நாடு முழுவதிலும் மீண்டும் ஆர்த்தெழுவார்கள் என்று எச்சரிக்கிறோம்.

முதல்வரின் பேச்சை ஒரு தனிப்பட்டவரின் கருத்தாகக் கொள்ள முடியாது. இதனைப் பாரதப் பிரதமரும் மத்திய அரசும், உச்ச நீதிமன்றமும் கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**